**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 20/2012 கற்பகவள்ளி (பிசா4) தேதி: 21.04.2026.**

**பிசா. 4 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 10ம் பிரதிவாதி பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பி.சா.ஆ.7 ஆவணம் அய்யப்ப நாயக்கர் பெயரில் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் இந்த ஆவணத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் தந்தை வாங்கிய சொத்தை பொருத்து மட்டுமே எனக்கு தெரியும். OS No. 47/2015 வழக்கு மற்றும் இந்த வழக்கு சங்கதிகளை தெரிந்து கொண்டு தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். OS No. 47/2015 வழக்கிலும் என் தரப்பில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.8 ஆவணம் 16.09.1944 தேதியில் முத்துலட்சுமியம்மாள் என்பவர் 10ம் பிரதிவாதியின் தாயாரை பெற்ற தகப்பனார் அய்யப்ப நாயக்கர் பெயரில் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றாலும், அதில் சர்வே எண். 511/2 ல் 3 ஏக்கர் என உள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த கிரைய ஆவணமே பொய்யானது ஆகும். பி.சா.ஆ.10 ஆவணம் அய்யப்ப நாயக்கர் என்பவர் 16.05.1960 தேதியில் அவரது மக்களுக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் என்றாலும், அதில் சர்வே எண். 511/2 புஞ்சை ஏக்கர் 3 என உள்ளது

என்றாலும், அந்த ஆவணத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பி.சா.ஆ.8, 10 ஆவணங்களை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கற்காக பொய்யாக செல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** 10ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.